முருகப்பெருமான் துணை

**மகான் கழற்சிங்கர் நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

03.12.2021, வெள்ளிக்கிழமை

1. யோகராசனே ஆறுமுக அரங்கா
உண்மை வழிகாட்டி அருளும்
யுகமாற்றம் செய்ய வந்தநல்
உயர் ஞானியே ஞான தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் பிலவ தேள் திங்கள்
ஆசிபட மூவைபீர் திகதி புகர் வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 17ம் நாள், 03.12.2021, வெள்ளிக்கிழமை)
அருளுவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை கழற்சிங்கர் நாயனாரும்
அறிவிப்பேன் உலகநலம் பெற
வாசிவென்ற ஞானிகள் சபை
வலம் வந்து அரங்கன் குடிலை
4. குடிலை காத்து வருகவே
குவலயத்தார் பிரணவக்குடிலை
தேடிவந்து சரணடைவு கொண்டு
தேக மனம் சுத்தி காணும்படி
5. காணும்படி ஞானம் பயின்று
கரும வினை போக்க வல்ல
தான தருமம் செய்யப் பழகி
தவராஜன் கரம்பட தீட்சை
6. தீட்சை ஆசிதனை ஏற்று
தேசிகன் அருளை தொடர்ந்து
மாட்சிமைபட ஏற்றுத் தொடர
மாதவமான சக்தி பெருகி
7. பெருகியே உலக மக்களுக்கு
பேரின்ப நிலை தானாகவே
முருகப் பெருமான் அருளாக
முழுமை ஞானமாகக் கனியும்
8. கனிவேலன் கருணை கிட்ட
கலியின் சிக்கல்கள் விலகும்
துணிவு கொண்ட தேசிகனின்
தொண்டர்படைகளில் இணைந்து
9. இணைந்துமே சக்தி மிக்க
இணையில்லா ஞானவான் எனும்
துணைபட ஞானிகள் ஆசி
தொடர்ந்திட சிறந்து நிற்பர்

**10.** நிற்கவே அரங்கன் காட்டும்
நீதி நெறி மாறாத வண்ணம்
அற்புதம் கொண்டவர்களாக
அரங்கன் தேடும் ஞானிகளாக

**11.** ஆகவே தேர்வு கண்டுமே
ஆறுமுகனார் அருளாசிபட
யுகமாற்றம் செய்து வாழ்வர்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—